25.03.2025 பி.வா.சா.4 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி (ஒ.எஸ்.எண்.14 /2016 ) திரு.பரதன்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -

1) மாரியப்பன்,தேனம்மாள் இவர்கள் இரண்டுபேரும் எனது தகப்பனார் கருப்பசாமிக்கோ, எனது தாயார் கன்னியம்மாள் பெயருக்கோ எழுத்து பூர்வமாக பதிவு செய்யப்பட்ட ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் பதிவு செய்து எழுதிக்கொடுத்துள்ளார். எந்த வருடம், எந்தஆண்டு, எந்த மாதத்தில், எந்த தேதி எழுதிக்கொடுத்தார்கள் என்றால் அது எனக்குத்தெரியாது பிறந்தது முதல் அந்த வீட்டில் தான் இருக்கிறேன். எனது தந்தை, தாயார் பெயரக்கு எழுதி பதிவுசெய்து கொடுத்தாக சொல்லும் ஆவணத்தை பதிவு ஆவணத்தை தெரிந்து கொள்வதற்கு வில்லங்க சான்று போட்டுப் பார்த்து அந்த பதிவு ஆவணத்தை சான்றிட்ட நகல் எடுத்து எனது தரப்பில் தாக்கல் செய்ய முடியும் என்றால் முடியும். எனது நிருபண வாக்குமூலத்திலோ, எனது தாயார் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலோ, மற்றும் கூடுதல் எதிர்வழக்குரையிலோ, எனது தாய், தந்தையானராக கருப்பசாமி-கன்னியம்மாள் பெயருக்கு பதிவு ஆவணம் எழுதிக்கொடுத்தாக எங்கும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் கடைசியாக மாரியப்பன் என்பவர் கொடுத்த அனுமதியின் பேரில் எனது தகப்பனார் வீடு கட்டி கதவு எண்.1/4 பி என ஏற்பட்டதாக சொல்லும் சங்கதியை எனது தாயார் தாக்கல் செய்த எதிர்வழக்குரை மற்றும் கூடுதல் எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில எனது தந்தை எந்த வருடம்வீடு கட்ட ஆரம்பித்து எந்த வருடம் முடித்தார் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். தாவாச்சொத்தை பொறுத்து எனது தந்தை கருப்பசாமி எனது தாயார் கன்னியம்மாள் பெயரில் வருவாய்துறையில் ஏற்பட்ட ஆவணத்தை எனது தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.10 வரி ரசீது சொத்துக்கும், தவாச்சொத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

2) எனது தாயார் கன்னிம்மாள் எதிர்வழக்குரை, கூடுதல் எதிர்வழக்குரையில் கட்சி செய்யாத சங்கதிகளை பற்றி நிருபண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பது சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதியின் இடத்தை ஆக்கிரமித்து பிரதிவாதி கட்டியுள்ளதாக பிராதில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மை என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம்

அளித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதற்காக எனது தாயாருக்காக நான் வந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாரியப்பனோ, தேனம்மாளோ எந்தக்காலத்திலும் எனது தகப்பனாருக்கு வீடு கட்டிக்கொள்ள அனுமதி கொடுத்தது இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
25.03.2025.